# யோர்க் பிரதேசத்தின் கணநேரக் காட்சி

யோர்க் பிரதேசம் தீவிரமாக மாறிக்கொண்டிருக்கின்றது. இது ரொறொன்ரோ நகருக்கு அருகில் இருப்பதும் இதன் வேகமான வளர்ச்சிக்கு ஒரு பகுதிக் காரணமாகும்.. ரொறொன்ரோ பெரும் பாகத்தில் (GTA) முன்னணி வகிக்கும் ஐந்து மாநகர சபைகளில் யோர்க் பிரதேசமும் ஒன்றாகும்.. 1995க்கும் 2001க்கும் இடைப்பட்ட காலத்தில் சுமார் 500,000 மக்களால் GTA வளர்ந்தது. இதில் 180,000 மக்களால் வளர்ச்சியடைந்த யோர்க் பிரதேசத்தின் வளர்ச்சியே GTA யில் மிகப் பெரியது.

1999 தொடக்கம் யோர்க் பிரதேச நகரசபை, சேவைகளுக்கான அதிக பொறுப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளது. இப்புதிய பொறுப்புக்களைப் பிரதிபலிக்கும் வகையில் 2002இல் அதன் வரவு செலவுத் திட்டம் 429 மில்லியன் டொலரில் இருந்து 1.1 பில்லியன் டொலராக வளர்ச்சி அடைந்துள்ளது.

பின்வரும் பிரதான தொழிற்பாடுகள் இப் பிரதேசத்தால் செயற்படுத்தப்படுகின்றன.

சமூக உதவி, சமூக வீடமைப்பு, குடும்பம் மற்றும் சிறுவர்களின் சேவைகள்

நீதிமன்ற நிர்வாகம், அவசரகால தாயார் நிலை

அபிவிருத்திசார் நிதியளிப்பு, வரவுசெலவுத்திட்ட நிர்வாகம், நிதித் திட்டமிடல், கண்காணிப்பு, அறிக்கையிடுதல்

நீண்டகால பேணல், பொது சுகாதாரத் தகவல்கள், அவசரகால மருத்துவ சேவைகள்

பொருளாதார விருத்தியும், சுற்றுலாத்துறையும் ஊக்குவிப்பும், நீண்ட காலத் திட்டமிடலும், மனித சேவைகள் திட்டமிடலும்

பொதுப் போக்குவரத்து, பிராந்திய பாதைகளின் வலையமைப்பு மற்றும் நீர் சுத்திகரிப்பும் அதன் விநியோகமும், வீணாகும் நீரினைக் கையாளுதலும், திண்மக் கழிவு முகாமைத்துவமும்

காவல் துறைச் சேவைகள்

## யோர்க்கின் பிரதேச அரசாங்கம்

யோர்க் பிரதேச மாநகர சபையானது 1971 ஜனவரி 1இல், ஒன்ராறியோ மாகாணத்தினால் உருவாக்கப்பட்டது. இது மகாணத்தின் ஆறு மாநகர சபைகளில் ஒன்று. யோர்க் பிரதேச சபை 20 உறுப்பினர்களைக் கொண்டது (19 உறுப்பினர்களும் ஒரு தலைவரும்). பிராந்திய மாநகர சபைகளின் நகர பிதாக்களும் பிரதேச சபை உறுப்பினர்களும் பிராந்திய சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகிய இரண்டிலும் இடம்பெறுவர். மூன்று வருடங்களுக்குரிய பிரதேச தலைவர் பெரும்பாலும் யோர்க் பிரதேச சபை உறுப்பினர்களால் தொடக்கவிழாக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவார்.

# விஷன் 2026இன் நோக்கம்

யோர்க் பிரதேச சபை தனது முதலாவது கேந்திர திட்டமான, யோர்க் பிரதேசம் 2021: ஒரு தொலை நோக்கு (விஷன் 2021 என அழைக்கப்படுவது) என்பதனை யோர்க் பிரதேச சமூகத்துக்கான இலக்குகளின் ஒரு வெளிப்பாடாக 1993இல் அங்கீகரித்தது. “பாரிய தோற்றப்பாட்டை” நிறுவுவதில் விஷன் 2021, ஒரு பெறுமதி மிக்க பங்கை வகித்தது. யோர்க் பிரதேச சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை அடையும் வகையில் சேவைகளின் அபிவிருத்திக்கும் முன்னேற்பாட்டுக்குமென, இது பிரதேச சபைக்கும் அதன் அலுவலர்களுக்கும் வழிகாட்டியுள்ளது.

முடிவுகள் மேற்கொள்வோருக்குரிய முன்னுரிமைகளைத் தீர்மானிக்கும் கேந்திர திட்டங்களை, ஒரு பெருகி வரும் எண்ணிக்கையிலான சமூகங்கள் கொண்டுள்ளன. மிக வெற்றிகரமானவை என நிரூபிக்கப்பட்டுள்ள விஷன் 2021இன் முக்கிய அம்சங்களின் மீது, விஷன் 2026 கட்டி எழுப்பப்படுகிறது. விஷன் 2021இல் இனங்காணப்பட்ட கருக்களை இது உள்ளடக்குகிறது. அத்துடன் குடியிருப்பாளர்களுடன் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் உரையாடல்களின்போது எழுப்பப்படும் விடயங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அவற்றைப் புதுப்பித்து வருகிறது

மேலும், விஷன் 2026இன் அபிவிருத்தியானது 2001ஆம் ஆண்டின் போது, பல குறிக்கோள்களைக் கொண்டிருந்தது:

- பிரதேசத்தின் மாற்றங்களையும் புதிதாகத் தலைதூக்கும் விடயங்களையும் பிரதிபலித்தல்
- பிரதேசத்தின் விரிவாக்கப்பட்ட ஆணையை அங்கீகரித்தல்
- திட்டமிடல் முன்னெடுப்புக்களை ஒருங்கிணைத்தல்
- பிரதேசத்தின் வியாபாரத் திட்டமிடலை வழிநடத்துதல்
- யோர்க் பிரதேசம் எவ்வாறான இடமாக இருக்க வேண்டும் என்பது குறித்து ஒரு சமூகம் என்ற வகையில் இணைந்து சிந்திப்பதற்கும் பேசுவதற்கும் குடியிருப்பாளர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குதல்

*விஷன் 2026* யோர்க் பிரதேசத்துக்கான ஒட்டுமொத்தமான ஒரு விரிவான திட்டமாகும். பிராந்தியத்துக்கும் அதன் பங்காளிகளுக்கும் உரிய எதிர்காலக் குறிக்கோள்களுக்கான முக்கிய பகுதிகளை இது விபரிக்கின்றது. பிரதேசத்தினால் கையேற்கப்பட உள்ள அதிக விபரங்களுடன் கூடிய வர்த்தக நிறுவன மற்றும் வியாபாரத் திட்டங்களுக்கான விடயங்களை தீர்மானித்து, அதற்கான வடிவமைப்புக்களையும் முன்வைக்கின்றது.

*விஷன் 2026* ஒரு தொலை நோக்கு கூற்றினையும் எட்டு குறிக்கோள்களையும் உள்ளடக்குகின்றது. அத்துடன் இப்பிரதேசம் எவ்வாறு இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு குறிக்கோளுக்குள்ளும் மக்கள் கூறியவற்றை விபரிக்கும் செயற்பாட்டுப் பகுதிகளையும் இது உள்ளடக்கும். இந்தக் குறிக்கோள்களில் பலவற்றை பிரதேசம் கருத்தில் எடுத்திருப்பது அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும், எமது வெற்றியைத் தொடர்வதற்கும் முன்னேற்றுவதற்குமான எமது கடப்பாட்டினை விஷன் 2026 காண்பிக்கின்றது.

முன்னைய விஷன் 2021 போன்று, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேசத்தின் பணியாட்கள், அமைப்புகள், தனித்தனியான குடியுரிமையாளர்கள், கவுன்சிலர்கள், பிராந்திய நகர சபைகளின் அலுவலர்கள் ஆகியோருடனான ஆலோசனைகளை விஷன் 2026 அடிப்படையாகக் கொண்டது,

# *விஷன் 2026ஐ விருத்தி செய்தல்*

“யோர்க் பிரதேசத்தின் எதிர்காலத்தை வடிவமைக்க எமக்கு உதவுக” என்பது 2001ஆம் ஆண்டின் விஷன் நடவடிக்கையின் போதான தகவல் வெளியீடுகளுக்கெனத் தயாரிக்கப்பட்ட ஒரு வெற்றிகரமான ஆலோசனை மேற்கோள் வாசகமாகும். விரிவான ஆலோசனை, செயலூக்கமுடைய தொலைநோக்கு நடவடிக்கையின் ஒரு தரக்குறியீடாகும். மூன்று முக்கிய குழுக்களிடமிருந்து ஆலோசனை பெறப்பட்டது: யோர்க் பிரதேச சபை உறுப்பினர்கள், யோர்க் பிரதேசத்தின் பணியாட்கள், மற்றும் அமைப்புக்கள், தனித்தனியான குடியுரிமையாளர்கள், பிராந்திய நகரசபைகளின் உறுப்பினர்கள், அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கிய சமூகம்.

தொலை நோக்கை வடிவமைப்பதிலும் அதன் கொள்கைகளை அறியத்தருவதிலும் அதன் இலக்குகளையும் செயற்பாட்டுப் பகுதிகளையும் வடிவமைப்பதிலும் அவசியமான, அவர்களது உள்ளீடுகளை இந்த ஆவணம் பிரதிபலிக்கின்றது. ஆலோசனையின் முதலாவது படிநிலையில் (2001 ஏப்ரல் முதல் ஜூன் வரை) எமது சமூகங்களின் தொடர்ச்சியான தராதரத்தை உறுதிசெய்யும் வகையில், பிரதேசம் கவனம் செலுத்த வேண்டும் என்று, பங்குபற்றுவோர் கருதும் முன்னுரிமைகளினதும் விவகாரங்களினதும் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பது நோக்கமாக இருந்தது. இரண்டாவது படிநிலை (2001 செப்ரெம்பர் முதல் நவம்பர் வரை) பங்குபற்றுவோருடன் இணைந்து விபரமாக நகல் ஆவணங்களை மீளாய்வு செய்வதனூடாகப் பரீட்சித்தது.

ஆலோசனை பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டது. இந்த நடைமுறயின் மிகச் சிறந்த தொடர்பாடல் கருவியாக நிரூபிக்கப்பட்டது, மின் இணையம் ஆகும். யோர்க் பிரதேச இணையத் தளத்தில் ஒரு விஷன் 2026 பக்கமானது, எழுத்தில் இடப்பட்ட விடயங்களை கொடுப்பதற்கும் எடுப்பதற்குமான வசதியான, பல்மொழிச் சாதனமாக சேவையாற்றியதுடன் அதில் வருகை தருவோருக்கு விஷன் 2026 நடவடிக்கைகள் பற்றிய இற்றைவரையிலான தகவல்களை வழங்கி வந்தது. சகல கையேடுகளும் அறிக்கைகளும் கூட்ட அறிவித்தல்களும் இணையத் தளத்தில் கிடைக்கப் பெற்றன. மிகப் பரவலாக விநியோகிக்கப்பட்ட ஆவணங்கள் சீன, பார்சி, பிரெஞ்சு, இத்தாலி, பஞ்சாபி, ரஷ்ய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இணையப் பக்கத்துக்கு வருகை தருவோர் எழுத்து வடிவிலான கருத்துக்களை வழங்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

யோர்க் பிரதேசத்தின் முன்னுரிமைகள் எவையாக இருக்கவேண்டும் என்பது குறித்து குடியிருப்பாளர்கள் என்ன எண்ணினார்கள் என்பது பற்றிய கருத்துக்களைச் சேகரித்த ஒரு தொலைபேசிக் கணக்கெடுப்பையும் முதலாவது படிநிலை உள்ளடக்கி இருக்கின்றது. நடவடிக்கைக்குரிய பகுதிளை இதன் முடிவுகள் தெரியப் படுத்தின. பிரதேச சபை உறுபினர்கள், யோர்க் பிரதேச பணியாட்கள், சமூக உறுப்பினர்கள் ஆகியோருடன் பட்டறைகள் நடத்தப்பட்டன. அத்துடன் இளைஞர்கள், பிராந்திய நகர சபைகளின் உறுப்பினர்கள் போன்ற குறிப்பிட்ட ஆர்வலர் குழுக்களுக்கென விசேட அமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

பொதுவான அறிவிப்புக்கள் ஊடாகவும் பத்திரிகை மற்றும் தொலைக் காட்சி நிறுவனங்கள் ஊடாகவும் யோர்க் பிரதேச விஷன் நடவடிக்கை, விரிவான ஊடக கவனிப்பைப் பெற்றது. முதலாவது படிநிலையின் போது யோர்க் பிரதேசத்தைச் சேர்ந்த சகல மெற்றோலான்டு கொம்மியூனிட்டி நியூஸ் பேப்பர்களும் குடியிருப்பாளர்களின் கரிசனைக்குரியனவாக அடையாளம் காணப்பட்ட சூழல், மனித சேவைகள் போன்றவற்றை ஓர் எட்டுப் பாகத் தொடர் விடயங்களாகப் பிரசுரித்திருந்தன. றொஜேர்ஸ் கேபிள் 10 தொலைக் காட்சியால் மூன்று தொலைக் காட்சி விபரணங்கள் ஒளிபரப்பப்பட்டன.

# போக்குகள்

குடியிருப்பாளர்களால் எதிர்காலத்தில் வேண்டப்படும் சேவைகள் மீது சில போக்குகள் செல்வாக்குச் செலுத்தும். உயர்தர சேவைகள், செயற்றிட்டங்களுடன், மாறிவரும் தேவைகளுக்குச் செயலூக்கத்துடன் பதிலளிக்கக்கூடிய வகையில் பிரதேசம் தனது புரிந்துணர்வைப் பயன்படுத்த முடியும்.

### *2026 அளவில் யோர்க் பிரதேசம் சுமார் 1.3 மில்லியன் மக்களுக்கு இருப்பிடமாகும்..*

இது 2001 முதலாக ஏறக்குறைய 500,000 மக்கள் தொகை அதிகரிப்பாக இருக்கும், ஒரு 2.1% வருடாந்த வளர்ச்சி வேகம்.

### *யோர்க் பிரதேசத்தின் சனத்தொகை மென்மேலும் முதுமையானதாக அமையும்..*

2026 அளவில் இன்று இருப்பதை விட மூன்று மடங்குக்கும் அதிகமான 50 வயதுக்கு மேற்பட்ட மக்கள் யோர்க்கில் வசிப்பர்.

### *அதிகரித்த எண்ணிக்கையில் குறைந்த வருமான வகையைச் சேர்ந்த மக்கள் வசிப்பர்.*

1986இல் யோர்க் பிரதேசத்திலிருந்த 44% குடும்பங்கள் உயர் வருமானம் உடையனவாகவும் 42% மத்தியதர வருமானமுடையனவாகவும், 14% குறைந்த வருமானம் உடையனவாகவும் கருதப்பட்டன. 1996 அளவில் குறைந்த வருமானமுடைய குடியிருப்பாளர்களின் விகிதாசாரம் மொத்த சனத் தொகையின் 19% சதவீதமாக அதிகரித்திருந்தது. அதேவேளை உயர் வருமானப் பிரிவு மாறாதிருக்க, மத்தியதர வருமானமுள்ள குழு 37% வீழ்ச்சி அடைந்திருந்தது.

### *அதிகரித்த எண்ணிக்கையிலான, இலகுவில் பாதிப்புகுள்ளாக்கூடிய குடியிருப்பாளர்களின் இருப்பிடமாக யோர்க் பிரதேசம் இருக்கும்.*

இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய, குறிப்பாக முதியோர், சிறுவர்கள், வீடற்றவர்கள் போன்றோரது எண்ணிக்கை அதிரித்து வருவதால், அவர்களுக்குப் போதுமான, பொருத்தமான சேவைகளை வழங்குவது, தொடர்ந்து சவாலாகவே இருக்கும்.

### *வீட்டினது அமைப்பு முறைகள் தொடர்ந்து மாற்றமடையும்*

தனியே வசித்துவரும் தனியாள் போன்ற குடும்பமற்ற வீட்டு வகைகள் அதிகரித்து வருவதனால் பரந்த வேறுபட்ட வகையிலான வீடுகளை யோர்க் பிரதேசம் கொண்டிருக்கும்.

### *யோர்க் பிரதேசத்தின் பல் இன சனத்தொகை தொடர்ந்து கிளைவிடும்..*

பாரிய பல்கலாச்சார சமூகத்தை யோர்க் பிரதேசத்துக்கு வருவிக்கும் வகையில் கனடாவின் இனரீதியான பன்முகத் தன்மையைக் குடிவரவுக் கொள்கைகள் அதிகரித்துள்ளன. முன்னர் எப்போதும் இல்லாத வகையில் யோர்க் பிரதேசத்தினை இப்போது அதிக இனக் குழுக்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

### *வேலைவாய்ப்பு வளர்ச்சியானது சனத்தொகை வளர்ச்சியை விட சற்று அதிகமாக இருக்கும்.*

1991இல் யோர்க் பிரதேசத்தில் 248,000 ஆக இருந்த வேலை வாய்ப்பு, 2001இல் 390,000 ஆக அதிகரித்தது. 2026 அளவில் யோர்க் பிரதேசத்தில் 696,000 ஆக வேலை வாய்ப்புக்கள் இருக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

### *பலதரப்பட்ட துறைகளில் வேலை வாய்ப்பு அதிகரிப்பு உணரப்படும்.*

உற்பத்தி, நிர்மாணம், விற்பனைப் பொருட்களின் சேமிப்பு, போக்குவரத்து என்பவற்றின் பொதுவான பாரம்பரிய தொழில்கள், வியாபார சேவைகள், அலுவலகத்துறை என்பவற்றின் புதிய வேலைகளால் பிரதியீடு செய்யப்படுவதால், வேலை வாய்ப்பின் தன்மை தொடர்ந்து மாற்றமுறும்.

***யோர்க் பிரதேசத்தில் ஏனைய இடங்களைப் போன்று, தொழில் நுட்பம் கூடுதலான முக்கியத்துவம் பெறும்.***

தொடர்பாடல், சேவை வழங்கல் முறை, எப்படி மக்கள் எதிர்காலத்தில் வாழப்போகின்றார்கள், வேலை செய்யப் போகின்றார்கள் என்பதை, தொழில் நுட்பத்தின் விரைவான மாற்றங்கள் திருத்தியமைக்கும்.

***அதே அல்லது குறைந்த செலவில் அதிக, சிறந்த சேவைகளை குடிமக்கள் தொடர்ந்து எதிர்பார்ப்பர்.***

1993 தொடக்கம், ஒன்ராறியோ வேர்க்ஸ், சமூக வீடமைப்பு, பிள்ளைப் பராமரிப்பு, போக்குவரத்து அவசரகால மருத்தவ சேவைகள் போன்ற துறைகள் உட்பட, புதிய சேவைகளை யோர்க் பிரதேசம் பொறுப்பேற்றுள்ளது.

***அதிக யோர்க் பிரதேசக் குடியிருப்பாளர்கள் தமது சமூகங்களில் பங்குபற்றுவர்.***

முன்னர் எப்போதும் இல்லாதவாறு, யோர்க் பிராந்திய குடியிருப்பாளர்கள் பெற்றோரில் ஆர்வம் உடையவர்களாகவும், தொண்டர்களாகவும், வரி செலுத்துவோராகவும், தமது சமூகங்களுடன் அதிகளவில் தொடர்பு பட்டுள்ளனர். இந்த ஈடுபாடும், இந்தக் கூடுதலான பங்குபற்றல்களும் யோர்க் பிரதேசத்தில் எமது ஒட்டுமொத்தமான உயர்தர சமூக வாழ்க்கைக்குப் பங்களிப்புச் செய்கின்றன.

***பதிலிறுக்கக்கூடியவர்கள், செயலூக்கமுடையவர்கள் என்பதை வரி செலுத்துவோருக்குக் காண்பிக்கும் வகையில் அரசாங்கம் தொடர்ந்து புதிய வழிகளைக் கண்டறியும்.***

யோர்க் பிரதேசம் ஒரு பெரிய கூட்டுத்தாபனம் என்பதுடன் ஒரு சமூகமும் ஆகும். இதன் பல்வேறு வகைப்பட்ட செயற்றிட்டங்களையும் சேவைகளையும் நிர்வகிக்கும் வகையில், இதன் அரசாங்கம் நவீன உலகியலுக்குத் தக்கவாறான பல்லாண்டுத் திட்டமிடல் நடைமுறகளை உருவாக்கியுள்ளது. உறுதியான தலைமைத்துவத்தை தொடர்ந்து வழங்குவதற்குத் தொலை நோக்குடைய சிந்தனையும் புதுமையான திட்டமிடலும் தேவை. செயற்படுதலைக் கண்காணிப்பதும் தொடர்ச்சியான முன்னேற்றமும் யோர்க் பிரதேசத்தின் நியமமான தொழிற்பாடுகளாக இருக்கும்..

# *வழிகாட்டல் தத்துவங்கள்*

யோர்க் பிரதேசக் குடியிருப்பாளர்கள் எதிர்காலத் தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் வடிவமைப்பதற்கு வேண்டிய முக்கிய கோட்பாடுகளை இனம் கண்டார்கள்.

*எட்டக்கூடியமை:* இடம் அல்லது தனியாள் அசைவுத் தன்மைகள் போன்ற வேறுபாடுகளின்றி, சகலருக்கும் கிடைக்கக்கூடிய செயற்றிட்டங்கள், சேவைகள், வசதிகள் என்பவற்றை வழங்குதல்.

*வியாபார-நட்பான சூழல்:* யோர்க் பிரதேசத்தில் வியாபாரங்கள் இடமமைத்து, தங்கியிருந்து, வளர்ச்சியடைவதற்கு அழைப்பு விடுத்து, உற்சாகமூட்டும் சூழலை வளர்த்தெடுத்தல்.

*பண்பு:* குடும்பங்கள் வலியனவாகவும், வீடுகளும் வீதிகளும் பாதுகாப்பானவையாகவும், கல்வி செயலூக்கமுடையதாகவும், வியாபாரம் ஆக்கபூர்வமானதாகவும், அயலவர்கள் ஒருவரையொருவர் பேணும் தன்மை உடையவர்களாகவும், குடியுரிமையாளர்கள் தமது வாழ்க்கைக்கும் குடும்பங்களுக்கும் ஏற்ற புத்திபூர்வமான தேர்வுகளை மேற்கொள்வதற்கு வேண்டிய சுதந்திரம் உடையவர்களாகவும் இருப்பதை உறுதிசெய்து கொள்ளும் வகையில் சகலரும் இணைந்து உழைக்கும் ஒரு பிரதேசத்தில் வசித்தல்.

*வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட சேவை:* எட்டக்கூடியதும், தக்க நேரத்துக்குரியதும், அறிவு பூர்வமானதும், செயல் தகுதியுடையதாகவும், நற்பண்புடையதாவும், பேணும் நோக்குடையதாகவும், நியாயமானதாகவும் உள்ள சேவைக்கு ஆதரவளித்தல்.

*மதிப்பும், இரக்கமும், நியாயமும்:* சகல இனங்கள், மதங்கள், பாலினங்கள், வயதுகள், நம்பிக்கைகள், வருமானங்கள், வல்லமைகள் என்பவற்றைக் கொண்டவர்களுக்கும் மரியாதை, இரக்கம், நியாயமான நடத்துகை என்பவற்றினூடாக சகல யோர்க் பிரதேச குடியுரிமையாளர்களினதும் உரிமைகளையும் மதிப்புக்களையும் அங்கீகரித்தல்

*பன்முகப்பாடு:* யோர்க் பிரதேசத்தை உருவாக்கும் மாநகர சபைகளினதும், சமூகங்களினதும், குழுக்களினதும், வளர்ந்துவரும் கலாச்சார பன்முகப்பாடுகளுக்கு மதிப்பளித்தல், பெறுமதியளித்தல், பதிலளித்தல்

*சமத்துவம்:* இடம், பணம் செலுத்தும் வல்லமை, அல்லது இனத்துவ வேறுபாடுகள் என்பன இன்றி, செயற்றிட்டங்களிலும், சேவைகளிலும் யோர்க் பிரதேச குடியிருப்பாளர்கள் பங்குபற்ற வழிவகுத்தல்.

*பொதுநிதிசார் பொறுப்பு:* நிலையான, நம்பிக்கையான அரசாங்கத்தினூடாக பொதுநிதியம் சார் பொறுப்பினை உறுதிப்படுத்தல்.

*சுகாதாரமும் நலமுடமையும்:* யோர்க் குடியிருப்பாளர்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளையும் சமூகம் மற்றும் மனோவெழுச்சி சார் நலனையும் ஆதரித்தல்.

*தலைமைத்துவம்:* தொடர்ச்சியான மதிப்பீடு, முன்னேற்றம், திறமையான நிர்வாக மாற்றம் என்பவற்றினூடாக மிகச் சிறந்த தரமுடைய அரசாங்கத்தை உறுதிப்படுத்தல்.

*திறந்த தொடர்பாடல்:* குடியுரிமையாளர்களுக்கும் பங்காளிகளுக்கும் எட்டக்கூடியதாக இருத்தல், அவர்களுடைய தேவைகளுக்குச் செவிமடுத்தல், கிரமமாக முன்னேற்றங்களை அறிக்கையிடுதல்.

*பங்குடமைகள்:* பிராந்திய மாநகர சபைகள், ஏனைய அரசாங்கங்கள், சமூக முகவர்கள் மற்றும் தனியார் துறைகள் வழியான பங்குடமையூடாக சேவைகளை ஒருங்கிணைத்தலும், ஆதரவளித்தலும், மேம்படுத்தலும்.

*தரம்:* யோர்க் பிரதேசக் குடியிருப்பாளர்களதும் வியாபாரங்களதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் முன்னணியிலுள்ள, செயலூக்கமுடைய, உகந்த நேரத்துக்குரிய சேவைகளை வழங்குல்.

*பாதுகாப்பு:* மக்கள் தமது அயற்புறங்களிலும், சமூகங்களிலும், வேலைத் தலங்களிலும் பாதுகாப்பாக இருப்பதாக உணர்வதை உறுதிப்படுத்தல்.

*பொதுச் சொத்துப் பராமரிப்பு:* யோர்க் பிரதேச இயற்கைச் சூழல், பாரம்பரியம் போன்ற சொத்துக்களை பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமை என்பதை இனம் காணுதல்.

# *தொலைநோக்குக் கூற்று*

விஷன் 2026இன் ஒட்டுமொத்தமான குறிக்கோளை காண்பிக்கும் வகையில் பின்வரும் கூற்று உருவாக்கப்பட்டது.

## “யோர்க் பிரதேசம்: உறுதியான, பேணும் தன்மை மிக்க, பாதுகாப்பான சமூகங்களை உருவாக்குதல்”

*இந்த தொலைநோக்குக் கூற்று எட்டு குறிக்கோள்களால் ஆதாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் பின்வரும் பக்கத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.*

*ஒரு பன்முகப்பாடுடைய சனத்தொகைக்கான தரமான சமூகங்கள்*

*மேம்படுத்தப்பட்ட சூழலும், பாரம்பரியமும், கலாச்சாரமும்*

*ஒரு செழிப்பான பொருளாதாரம்*

*எமது குடியிருப்பாளர்களின் தேவைகளுக்குப் பதிலிறுத்தல்*

*எமது குடியிருப்பாளர்களுக்கான வீடமைப்புத் தேர்வுகள்*

*நிர்வகிக்கப்பட்ட, சமநிலைப்படுத்தப்பட்ட வளர்ச்சி*

*வளர்ந்துவரும் ஒரு பிரதேசத்துக்கான உட்கட்டமைப்பு*

*ஈடுபட்டுள்ள சமூகங்களும் உடன் பதிலிறுக்கவல்ல ஒரு பிரதேசமும்*

# ஒரு பன்முகப்பாடுடைய சனத்தொகைக்கான தரமான சமூகங்கள்

**2026இல், யோர்க் பிரதேச குடியிருப்பாளர்கள் செழிப்பான, உற்சாகமான, மக்கள் நட்பான தன்மைகளைக் கொண்ட சுகாதாரமான, இலகுவில் எட்டக்கூடிய, பாதுகாப்பான அயற்புறங்களில் வசிப்பர். யோர்க் பிரதேசத்துக்கு குடியிருப்பாளர்களைக் கவர்ந்த வாழ்க்கையின் உயர் தராதரத்தை அவர்கள் தொடர்ந்து அனுபவிப்பர். அத்துடன் தமது சமூகத்துக்கு உரியவர்கள் என்ற வலுவான உணர்வும் அர்ப்பணிப்பும் கொண்டிருப்பர்.**

இந்த குறிக்கோளை ஆதரிப்பதற்கென, யோர்க் பிரதேசம் பிராந்திய மாநகரசபைகளுடனும், ஏனைய பங்காளிகளுடனும் இணைந்து செயற்பட்டு, இச்செயல்முறைப் பகுதிகளில் கவனம் செலுத்தும்:

➢ **எமது பன்முகத் தன்மையைக் கொண்டாடுதல்**

- எமது பல்கலாச்சாரச் சனத்தொகையை அங்கீகரித்தல்
- புதுமையான சேவை விநியோக வழிமுறைகளுடன் எமது பன்முகத் தன்மைக்கு பதிலிறுத்தல்
- இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகத்தக்க குடியிருப்பாளர்களின் தேவைகளுக்கு பதிலிறுக்கக்கூடியதாக இருத்தல்
- முதியோர் தமது தேவைகளை எட்டுதல் உட்பட, அவர்களது சமகால, எதிர்கால தேவைகளுக்காகத் திட்டமிடுதல்
- முதியவர்களது அறிவிலும் அனுபவத்திலும் இருந்து பயன் பெறுதல்
- தேவையை எதிர்பார்த்திருக்கும் பிள்ளைகளுக்கு பதிலிறுத்தல்
- இளைஞர்களில் சம்பந்தப்படுதலும் முதலீடு செய்தலும்

➢ **செழிப்பான நகர, கிராமிய சமூகங்களை உருவாக்குதல்**

- சமூகம், அடையாளம், இடம் தொடர்பான உறுதியான ஓர் உணர்வை வளர்த்தெடுத்தல்
- ஒரு பலதரப்பட்ட செயற்பாடுகள், பொழுதுபோக்கு வாய்ப்புக்கள், உற்சாகமான சமூக நிலையங்கள் என்பவற்றின் விருத்தியை ஊக்குவித்தல்
- வாழக்கூடிய, நிலைத்திக்கக்கூடிய, பாதுகாப்பான சமூகங்களை ஊக்குவித்தல்
- இறுக்கமான சமூக மையப் பண்புகளை மீளவலுவூட்டலும் ஊக்குவித்தலும்
- உயர்தர நகர வடிவமைப்பை ஊக்குவித்தல்
- பாதசாரிகள் நட்பான, போக்குவரத்தை நோக்கமாகக் கொண்ட அயற்புறங்களை உற்சாகப்படுத்தல்
- எமது நகரங்கள், கிராமங்களினது தனித்துவங்களுடன், எமது கிராமப் புறங்களையும் கிராமிய வாழ்க்கை முறைகளையும் மதித்தல்
- நகர சேவை மட்டங்களுக்கான கிராக்கிகளின் சவால்களை கிராமிய சமூகங்களில் எடுத்துரைத்தல்

# மேம்படுத்தப்பட்ட சூழலும், பாரம்பரியமும், கலாச்சாரமும்

**2026இல், யோர்க் பிரதேசக் குடியிருப்பாளர்கள் இப்பிரதேசத்தின் தனித்துவமான இயற்கைப் பாரம்பரியம் (நிலம், காற்று, நீர்), கலாச்சாரப் பாரம்பரியம் (எமது வரலாற்றுக்கும், நம்பிக்கைக்கும், கலாச்சாரத்துக்கும் முக்கியமான இடங்களும் கட்டடங்களும்) என்பவற்றைத் தொடர்ந்து மதித்து அரவணைப்பர்.**

இந்த குறிக்கோளை ஆதரிப்பதற்கென, யோர்க் பிரதேசம் பிராந்திய மாநகரசபைகளுடனும், ஏனைய பங்காளிகளுடனும் இணைந்து செயற்பட்டு, இச்செயல்முறைப் பகுதிகளில் கவனம் செலுத்தும்:

➢ **ஒரு பச்சை யோர்க் பிரதேசத்தைப் பாதுகாத்தல்**

- காடுகள், ஆற்றுப் பள்ளத்தாக்குகள், ஓக் றிட்ஜஸ் மொறெயின் மற்றும் லேக் சிம்கோ என்பவற்றின் உணர்ச்சி மிக்க தன்மைகளைப் பாதுகாத்தல்
- ஒரு நிரந்தரமாக இணைக்கப்பட்ட பச்சை நிலத் தொகுதியை ஊக்குவித்தல்
- யோர்க் பிரதேசக் காடு, நிலப் பாதுகாப்பு உத்திமுறை போன்று ஒரு பச்சைப் பிரதேசத்துக்கான உத்திமுறைகளைத் தொடர்ந்து உருவாக்கிக் கட்டியெழுப்புதல்

➢ **சுத்தமான நீரையும் காற்றையும் உறுதிசெய்தல்**

- நில நீர், மேல்மட்ட நீர், ஓடைகள் என்பவற்றின் தரத்தையும் அளவையும் பாதுகாத்தல்
- நில நீரின் முக்கியத்துவம் பற்றிய அறிதலை மேம்படுத்தல்
- குடி நீர்த் தரத்துக்கான உயர் தராதரத்துக்குக் கட்டுப்படுதலும் அதனை நிலைநாட்டலும்
- சுத்தமான காற்றுக் கொள்கைகளையும் முன்னெடுப்புக்களையும் ஊக்குவித்தல்
- காற்றின் தரத்தை அதிகரிப்பதற்கென, பகிரங்க போக்குவரத்து, சைக்கிள் பாவனை போன்ற மாற்று போக்குவரத்து முறைகளை ஊக்குவித்தல்

➢ **பாதுகாப்பு ஊக்குவிப்பு**

- நீர்ப் பாதுகாப்பை ஊக்குவித்தல்
- பிரதேச அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் சக்தியை சாதுரியமாகப் பயன்படுத்தல்
- மாற்று சக்தி மூலங்களையிட்டு விசாரித்து ஊக்குவித்தல்
- மூன்று வகை Rகளான reduce (குறைத்தல்), reuse (மீள உபயோகித்தல்), recycle (மீள் சுற்றுக்கு உட்படுத்தல்) என்பவற்றுடன் வாழ்தலும் அவற்றை ஊக்குவித்தலும்
- காலநிலை மாற்றத்தை எதிர்பார்த்தலும் அதற்கு ஏற்றவகையில் நடந்து கொள்ளலும்

➢ **எமது பாரம்பரியத்திலும் கலாச்சாரத்திலும் பெருமையைக் கட்டியெழுப்புதல்**

- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகர, கிராமிய சிறப்புக்களைக் கொண்டாடுதல்
- எமது தனித்துவமான கலாச்சார தலங்களை மெச்சுதல்
- எமது கலை கலாச்சாரங்களை உற்சாகப்படுத்தி, ஊக்குவித்தல்
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள், பாரம்பரிய வீடுகள், குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பிரதேசங்கள் என்பவற்றைப் பாதுகாக்க உற்சாகப்படுத்தல்
- எமது மாறிவரும் கலாச்சார, நம்பிக்கைச் சமூகங்களை அரவணைத்தல்

- **எமது விவசாயத் தளங்களைத் தொடர்ந்து வைத்திருத்தல்**

- எமது பாரம்பரியத்திலும் பொருளாதாரத்திலும் உள்ள விவசாயத் தொழிற் துறையினதும், நிலப்பரப்பினதும் பங்கினை இனங்காணுதல்
- ஹொலன்டு மார்ஷ் போன்ற உள்ளூர் உணவு மூலங்கள் உட்பட, உயர் தரமிக்க விவசாய நிலங்களைப் பாதுகாத்தல்
- பொருத்தமற்ற அல்லது மோசமாகத் தீங்கு விளைவிக்க வல்ல பாவனைகளில் இருந்து விவசாயப் பகுதிகளைப் பாதுகாத்தல்

# ஒரு செழிப்பான பொருளாதாரம்

**2026இல் யோர்க் பிரதேசம் தனது உயர்தர தொழில் நுட்பம், புதுமையான வியாபாரம், உதவுகரமான வியாபார உட்கட்டமைப்பு, உயர்திறன் மிக்க குடியிருப்பாளர் வேலைப்படை என்பவற்றுக்காகப் புகழ் பெறும்.**

இந்த குறிக்கோளை ஆதரிப்பதற்கென, யோர்க் பிரதேசம் பிராந்திய மாநகரசபைகளுடனும், ஏனைய பங்காளிகளுடனும் இணைந்து செயற்பட்டு, இச்செயல்முறைப் பகுதிகளில் கவனம் செலுத்தும்:

➢ **வியாபாரங்களைக் கவர்வதும் ஆதரவளிப்பதும்**

- வியாபார ஆரம்பங்கள் மற்றும் வியாபாரங்களின் வளர்த்தெடுப்பு, விரிவாக்கம், மாறுபட்ட திசைகளிலான வளர்ச்சி போன்றவற்றிற்கு ஆதரவளித்தல்
- நிலைநாட்டப்பட்ட வியாபாரப் பகுதிகளை மீள வலுவூட்டுதல்
- பொருளாதார அபிவிருத்தி வாய்ப்புக்களைத் தேடி, ஊக்குவிப்பதற்கென பிராந்திய நகரசபைகள், ரொறொன்ரோ பெரும்பாகத்திலுள்ள எமது அயலவர்கள் ஆகியோருடன் பங்காளிகள் ஆகுதல்
- காடுகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கிராமங்கள், பூந்தோட்டங்கள், கலை கலாச்சார நடவடிக்கைகள் என்பன உட்பட, எமது சுற்றுலாத்துறை வலிமைகளை ஊக்குவித்தல்
- பிரதேச ரீதியிலும் உள்ளூர் ரீதியிலும் வியாபாரங்களுக்கிடையிலும் வியாபாரம் மற்றும் ஏனைய (சுகாதாரம், கல்வி, அரசாங்கம் போன்ற) துறைகளுக்கிடையிலும் வலைத் தொடர்பை வளர்த்தெடுத்தல்
- பிரதேசத்தின் சேவைகள் பற்றிய வியாபாரங்களினது அறிதலை அதிகரித்தல்
- போக்குவரத்து மேம்படுத்தல்கள் ஊடாக, பிரதேசத்தில் மக்களதும் பாவனைப் பொருட்களதும் சிறப்பான இயக்கத்தை ஆதரித்தல்
- வாழ்வதற்கு, வேலை செய்வதற்கு, விளையாடுவதற்கு, கற்பதற்கு உரிய இடமாக இருக்கும், எமது வலிமைகளையிட்டு மேலும் பூகோள அறிதலைக் கட்டி எழுப்புதல்

➢ **தொடர்ச்சியான கற்கையை உற்சாகப்படுத்தல்**

- வாழ்க்கை முழுவதும் கற்பதற்கான வாய்ப்புக்களின் அபிவிருத்தியையும் குடியிருப்பாளர்களுக்கு இருக்கும் விசாலமான கற்கைநெறி வாய்ப்புக்களையும் ஊக்குவித்தல்
- குடியிருப்பாளர்களுக்கு இருக்கும் இரண்டாம் நிலைக்குப் பின்னரான கல்வியை மேலும் பெறுவதற்கான வாய்ப்புக்களை ஊக்குவித்தல்
- முக்கிய வியாபார மற்றும் கல்வி பங்காளிகளுடன் இணைந்து, வேலையாட்களையும் கல்வித் தேவைகளையும் இனங்காணுதல்
- நாளைக்கான நீர் (Water for Tomorrow) போன்ற செயற்றிட்டங்களைப் பற்றிய பொது அறிதலை அபிவிருத்தி செய்தல்

➢ **புதுமைகளை ஊக்குவித்தலும் ஆதரிப்பதும்**

- மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்ப உட்கட்டமைப்பை ஊக்குவித்தல்
- போக்குவரத்து போன்ற இலக்குடன் கூடிய சேவைகளின் விரிவாக்கத்தினூடாக குறிப்பிட்ட தொழில் துறைகளில் வேலை உருவாக்கத்துக்கு உதவுதல்
- நூலகங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற சமூக தலங்களில் தொழில் நுட்பத்தைப் பெறுவதை ஊக்குவித்தல்

# *எமது குடியிருப்பாளர்களின் தேவைகளுக்குப் பதிலிறுத்தல்*

**2026இல் யோர்க் பிரதேசம் மனித சேவைகள், பாதுகாப்பான, பேணுதகைமையுடைய, ஆரோக்கியமான ஒரு சமூகத்தை ஆதரித்து, ஓர் உயர்ந்த தரமுள்ள வாழ்க்கையைப் பேணி, ஊக்குவிக்கும். காவல் துறையினர், பாடசாலைகள், வியாபாரங்கள், வீடமைப்பு வழங்குவோர், வைத்தியசாலைகள், சமூக சேவை வழங்குவோர், பொது சுகாதார முகவர்கள், பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் இலாப நோக்கற்ற, தொண்டு நோக்குடைய, வியாபாரக் குழுக்கள் என்பன உட்பட பலதரப்பட்ட நிறுவனங்கள் இணைந்து திட்டமிட்டு செயற்படும்.**

இந்த குறிக்கோளை ஆதரிப்பதற்கென, யோர்க் பிரதேசம் பிராந்திய மாநகரசபைகளுடனும், ஏனைய பங்காளிகளுடனும் இணைந்து செயற்பட்டு, இச்செயல்முறைப் பகுதிகளில் கவனம் செலுத்தும்:

➢ **மக்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்**

- உறையுளுக்கான தேவையை எதிர்கொள்ளல்
- வேலை வாய்ப்புக்களை எட்டுவதற்கு உதவுதல்
- பாதுகாப்பான, போதுமான உணவை எட்டுவதற்கு உதவுதல்
- ஆரம்பகாலப் பிள்ளை அபிவிருத்திக்கு உதவும் சேவைகளை எட்ட வழிசெய்தல்
- உள்ள சேவைகள் பற்றி மக்களுக்கு அறிவித்தல்
- எட்டக்கூடியதும் இயலக்கூடியதுமான போக்குவரத்தினூடாக அசைவினை உறுதிப்படுத்தல்

➢ **பாதுகாப்பும் பவுத்திரமுமான சமூகங்களை ஆதரித்தல்**

- உயர்தர காவல் துறைச் சேவையை வழங்குதல்
- இலகுவில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் பாதுகாப்புத் தேவைகளை வழங்குதல்
- காவல் துறைக்கும் சமூகத்துக்கும் இடையே வலுவான கூட்டமைப்பை கட்டியெழுப்புதல்
- உயர்தர, ஒருங்கிணைக்கப்பட்ட அவசரகால சேவைகளை ஆதரித்து, தொடர்ந்து வழங்குதல்

➢ **நலமுடைமையை ஊக்குவித்தல்**

- வாழ்வின் சகல படிநிலைகளிலும் சுகாதார பராமரிப்புத் தேவைகளை ஆதரித்தல்
- தகவல், கல்வி, தவிர்ப்பு என்பன ஊடாக ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை உற்சாகப்படுத்தல்
- சமூக, உளவியல் நலன்களை ஊக்குவித்தல்

➢ **எமது மனித வளங்களையும் பங்குடைமைகளையும் மேம்படுத்தல்**

- பயிற்றுவிக்கப்பட்ட சுகாதார, கல்வி, சமூக சேவை துறையாளர்களைக் கவர்தல்
- சேவை வழங்கலை மேம்படுத்தும் பொருட்டு தொண்டர்களைச் சேர்த்துப் பயிற்றுவித்தல்
- அதிக, மேலும் சிறந்த சேவைகளை வழங்குவதற்கு சமூக முகவர் நிலையங்களுடன் பங்காளியாதல்

- சேவைகளை வழங்குவதற்கென பொதுத்துறை, தனியார்துறைப் பங்காளிகளுடன் உறவுகளைக் கட்டியெழுப்புதல்
- பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புக்களை ஏற்பதற்கு எமது சமூகத்துக்கு அதிகாரம் வழங்குதல்

# எமது குடியிருப்பாளர்களுக்கான வீடமைப்புத் தேர்வுகள்

**2026இல், யோர்க் பிரதேசக் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான, கட்டுப்படியாகக்கூடிய, மற்றும் அவர்களது பன்முகத் தன்மை கொண்ட, மாறிக்கொண்டிருக்கும் தேவைகளுக்கேற்ப பலவகைப்பட்ட வீடமைப்புத் தேர்வுகளையும் எட்டக்கூடியவர்களாக இருப்பர்.**

இந்த குறிக்கோளை ஆதரிப்பதற்கென, யோர்க் பிரதேசம் பிராந்திய மாநகரசபைகளுடனும், ஏனைய பங்காளிகளுடனும் இணைந்து செயற்பட்டு, இச்செயல்முறைப் பகுதிகளில் கவனம் செலுத்தும்:

➢ **பொருத்தமான பலவகைப்பட்ட வீடமைப்பு மற்றும் பாவனைப் பொருட்ளை வழங்குதல்**

- குடியிருப்பாளர்களுக்கென இருக்கக்கூடிய தேர்வுகளை அதிகரிப்பதற்கென ஒரு விசாலமான பலதரப்பட்ட வீடமைப்பு வகைகளை ஊக்குவித்தல்
- குடியிருப்பாளர்கள் வாடகைக்கமரவோ, விலைக்கு வாங்கவோ கட்டுப்படியாகக்கூடிய வீடமைப்புத் தயாரிப்பை ஊக்குவித்தல்
- தனியாக வசித்து வரும், உடல் குறைபாடுகள் கொண்ட மக்கள், முதியவர்கள் போன்றோரின் விசேட வீடமைப்புக்களுக்கான தேவைகளுக்குப் பதிலிறுத்தல்

➢ **உறுதியான வாழ்க்கை, வேலை, விளையாட்டு, கற்கை இணைப்புக்களுக்கென திட்டமிடுதல்**

- குடியிருப்பாளர்கள் எங்கு வாழ்கிறார்கள், வேலை செய்கிறார்கள், விளையாடுகிறார்கள், கற்கிறார்கள் என்பவற்றுக்கிடையே மேலும் சிறந்த இணைப்புக்களை எய்துதல்
- பணியாட்களின் வீட்டுத் தேர்வுகளின் தேவைகளுக்கு ஈடுகொடுக்க உழைத்தல்
- மக்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகாக பொது, தனியார் சேவைகளின் விருத்தியை ஊக்குவித்தல்

➢ **நன்கு வடிவமைக்கப்பட்ட, வாழக்கூடிய சமூகங்களை உருவாக்குதல்**

- மக்கள் தேவைகளை வலியுறுத்தும் தரமான நகர திட்டமிடல்களையும் வடிவமைப்புக்களையும் ஊக்குவித்தல்
- குடியிருப்புமயமான வீதி வனப்பினை ஊக்குவித்தல்
- சேவைகளுக்கென மக்கள் நடந்து செல்லக்கூடிய இறுக்கமான சமூகங்களின் விருத்தியை ஊக்குவித்தல்
- அபிவிருத்தியுடன் இயற்கையினது ஒன்றிணைதலை ஊக்குவித்தல்
- கட்டடக்கலை வடிவமைப்புக் கட்டுப்பாடுகளை புதிய அபிவிருத்திகளில் ஊக்குவித்தலும் நடைமுறைப்படுத்தலும்

➢ **பிரதான வீடமைப்புத் தேவைகளை எதிர்கொள்ளல்**

- வீடில்லாமையையும், வளர்ந்துவரும் வீடில்லாமை தவிர்ப்புச் செயற்றிட்டங்களையும் எதிர்கொள்ளல்
- இலகுவில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய குடியிருப்பாளர்களுக்கான உறையுள், கட்டுப்படியாகும் சொந்தவுரிமைத் தேர்வுகள் என்பன உட்பட, பலதரப்பட்ட வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கொள்கைகளையும் செயற்றிட்டங்களையும் விருத்தி செய்தல்

- கலந்துபட்ட வருமான சமூகங்களை உண்டாக்குவதற்கென தனியார், இலாப நோக்கற்ற துறைகள் மற்றும் ஏனைய அரசாங்கங்கள் என்பவற்றுடன் ஆக்கபூர்வமான பங்குரிமைகளை ஊக்குவித்தல்
- வீடமைப்புக்கெனக் கூடுதலான நிதிக்காக அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் வாதாடுதல்

# *நிர்வகிக்கப்பட்ட, சமநிலைப்படுத்தப்பட்ட வளர்ச்சி*

**2026இல், யோர்க் பிரதேசம் ஆரோக்கியமான சமூகங்கள், பொருளாதார வலிமை, நின்று நிலைக்கக்கூடிய இயற்கைச் சூழல், திறமையான மனித சேவைகள் என்பவற்றுக்கு ஆதரவளிக்கும் வேகத்தில் வளர்ந்திருக்கும்.**

இந்த குறிக்கோளை ஆதரிப்பதற்கென, யோர்க் பிரதேசம் பிராந்திய மாநகரசபைகளுடனும், ஏனைய பங்காளிகளுடனும் இணைந்து செயற்பட்டு, இச்செயல்முறைப் பகுதிகளில் கவனம் செலுத்தும்:

➢ **வளர்ச்சி முகாமைத்தவத்துக்கு ஒரு கேந்திர வழிமுறையை மேற்கொள்ளல்**

- வேலை வளர்ச்சியினதும் சனத்தொகை வளர்ச்சியினதும் இடங்களை ஒருங்கிணைத்தல்
- நகரப் பகுதிகளில் நிலம், உட்கட்டமைப்பு, சேவைகள் என்பவற்றை திறமையாகப் பயன்படுத்தல்
- உட்கட்டமைப்பு மற்றும் சேவை (பாடசாலைகள், சமூகத்தலங்கள், வீட்டுப் பாவனை உபகரணங்கள், வீதிகள்) என்பவற்றின் அபிவிருத்தி நேரங்களை புதிய வளர்ச்சிப் பகுதிகளின் அபிவிருத்தியுடன் ஒருங்கிணைத்தல்

**வளர்ச்சியை சூழலுடன் சமநிலைப்படுத்தல்**

- சூழல் உத்திமுறைகளிலும் சேமிப்பிலும் ஒரு தலைமைத்துவத்தை எடுத்தல்

➢ **வளர்ச்சிக்கு நிதியளித்தல்**

- எதிர்காலத் தேவைகளுக்கென போதுமான நிதியைப் பாதுகாத்தல்
- நீண்டகால முதலுக்கான திட்டங்களில் கவனம் செலுத்தல்
- உள்ளூர் மாநகர சபைகளுடன் முயற்சிகளை ஒருங்கமைத்தல்
- புதுமையான நிதியளிப்பு முறைகளுக்கென மத்திய, மாநில அரசாங்கங்களுடனும் தனியார் துறைகளுடனும் பங்காளிகளாதல்

➢ **மனித சேவைகளுக்கெனத் திட்டமிடுதல்**

- வளர்ந்தும் மாறியும் வரும் ஒரு சனத்தொகையின் மனித சேவைத் தேவைகளை எதிர்பார்த்து அவற்றிற்குப் பதிலிறுத்தல்
- மனித சேவைகள் திட்டமிடல் கூட்டமைப்பு போன்ற குழுக்கள் ஊடாக, பல்வேறு பிரிவுகளுக்குத் தேவைப்படும் மனித சேவைகள் திட்டமிடல்களையும் செயல் திட்டமிடல்களையும் ஆதரித்தல்

# வளர்ந்துவரும் ஒரு பிரதேசத்துக்கான உட்கட்டமைப்பு

## 2026இல், செயலூக்கமுடைய, திறமையான, சூழல் ரீதியான உணர்தன்மை மிக்க போக்குவரத்து, கழிவு நிர்வகிப்பு, நீர்த் தொகுதி என்பவற்றை யோர்க் கொண்டிருக்கும்

இந்த குறிக்கோளை ஆதரிப்பதற்கென, யோர்க் பிரதேசம் பிராந்திய மாநகரசபைகளுடனும், ஏனைய பங்காளிகளுடனும் இணைந்து செயற்பட்டு, இச்செயல்முறைப் பகுதிகளில் கவனம் செலுத்தும்:

➢ **ஓர் ஒருங்குபடுத்தப்பட்ட போக்குவரத்து வலையமைப்பை விருத்தி செய்தல்**

- நெருக்கடிகளைக் குறைப்பதற்கு புதுமைகளையும் தொழில் நுட்பங்களையும் ஆராய்ந்து நடைமுறைப்படுத்தல்
- மாநிலம் மற்றும் பிரதேசத்துக்கு இடையிலான உட்கட்டமைப்புடன் இணைந்து திறம்பட இயங்கக்கூடிய வகையில் எமது பாதைகளைத் திட்டமிடல்
- எமது போக்குவரத்து வலையமைப்பு, அபிவிருத்தியுடன் ஒருங்கிணைவதை உறுதி செய்தல்
- நடை, சைக்கிள் பாவனை போன்ற மாற்று போக்குவரத்து வடிவங்களுக்கு வழியமைத்தல்
- செயலூக்கமுடைய காவல்துறை, கல்வி, மெல்லுணர்வுடன் கூடிய வடிவமைப்பு என்பவற்றினூடாக யோர்க் பிரதேச பாதைகளில் பாதுகாப்பை ஊக்குவித்தல்

➢ **போக்குவரத்தை எட்டக்கூடியதாக்குதல்**

- வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்ட போக்குவரத்துச் சேவைக்கென சேவை, உட்கட்டமைப்பு ஆகியவற்றை தொடர்ந்து முன்னேற்றுதல்
- விசேட போக்குவரத்துச் சேவையின் சட்டக் கட்டுப்பாட்டை மேம்படுத்தல்
- போக்குவரத்துச் சேவைகளின் மிகச் சிறந்த கூட்டு ஒன்றினை அபிவிருத்தி செய்தல்
- தனியார் வாகன உபயோகத்துக்கு நடைமுறைச் சாத்தியமான, புத்திசாலித்தனமான மாற்றீடாக பொதுப் போக்குவரத்து உபயோகத்தை ஊக்குவித்தல்
- பிராந்தியத்தின் வேலை வாய்ப்புப் பகுதிகளுக்கு உயர்மட்ட போக்குவரத்துச் சேவைகளை திட்டமிடுதல்
- அசுத்தவாயு வெளியேற்றத்தை குறைப்பற்கு மாற்று எரிபொருள் தொழில் நுட்பங்களை விசாரித்தல்

➢ **கழிவுகளை கண்காணித்துக் குறைத்தல்**

- மீள்சுற்றுவட்டம் உட்பட, ஒரேகுழியிலிட்டு நிரப்பும் கழிவுகளை வெவ்வேறு இடங்களுக்குத் தொடர்ந்து திசைதிருப்ப ஊற்சாகப்படுத்தல்
- மீள்சுற்றுவட்டம் பற்றிய பொது அறிதலை மேம்படுத்தல்
- கழிவுகளைக் குறைப்பதற்கும் கையாள்வதற்கும் புதிய தொழில் நுட்பங்களைத் தொடர்ந்து முயற்சித்தல்
- கழிவு குறைப்பில் ஒரு முன்னோடியாயிருத்தல்

➢ **எமது எதிர்காலத்துக்கான நீரை ஊறுதி செய்தல்**

- யோர்க் பிரதேசத்துக்கான நீண்டகால நீர் மூலம் ஒன்றை உறுதிப்படுத்தல்
- பிராந்திய மாநகர சபைகளின் நீர்த் தொகுதிகளுக்கும் நிலையங்களுக்கும் பாதுகாப்பான, நம்பிக்கையான நீர் விநியோகத்தை வழங்குதல்
- வீணடிக்கப்பட்ட நீரின் உறுதியான, சிக்கனமான சுத்திகரித்தலை உறுதிசெய்தல்

- வளர்ச்சியை எதிர்பார்க்கும் புதிய தொகுதிகளை கட்டியெழுப்புதல்
- சூழல் தொடர்பாக உணர்ச்சிமிக்க செய்முறைகளை ஒன்றிணைப்பதற்கு நீர்த் தொகுதிகளை இற்றைவரையாக்குதல்

# ஈடுபட்டுள்ள சமூகங்களும் உடன் பதிலிறுக்கவல்ல ஒரு பிரதேசமும்

**2026இல், யோர்க் பிரதேசம் தனது குடியிருப்பாளர் ஈடுபாடு குறித்து பிரபலம் பெற்றிருக்கும் என்பதுடன் வெளிப்படையான கொள்கை ஆக்கத்திலும், தீர்மானங்களை எடுப்பதிலும், செயலூக்கமுடைய தொடர்பாடலிலும், வலுவான பங்குரிமையிலும், தெளிவான நம்பகத் தன்மையிலும், மிகச் சிறந்த தரமுடைய சேவையிலும் உயர் தராதரத்தை நிறுவிக்கொள்ளும்.**

இந்த குறிக்கோளை ஆதரிப்பதற்கென, யோர்க் பிரதேசம் பிராந்திய மாநகரசபைகளுடனும், ஏனைய பங்காளிகளுடனும் இணைந்து செயற்பட்டு, இச்செயல்முறைப் பகுதிகளில் கவனம் செலுத்தும்:

➢ **எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை முன்னின்று தீர்த்து வைத்தல்**

- வாடிக்கையாளர் சேவைக்கு ஓர் உயர் தராதரத்தை அமைத்தல்
- எமது பல்மொழிச் சனத்தொகைக்கு சேவைகளை வழங்குதல்
- சரியான நேரத்தில், இடத்தில், விலையில் சேவைகளுக்கான தேவைகளை தீர்த்து வைத்தல்

➢ **உயர் செயற்றிறன் குழுக்களைக் கட்டியெழுப்புதல்**

- செயலூக்கமுடைய அலுவலர்களைக் கவர்ந்து, தொடர்ந்து வைத்திருத்தல்
- எமது அமைப்பில் தொடர்ச்சியயான கற்றலை ஊக்குவித்தல்

➢ **சேவை வழங்கலில் பங்காளியாக இருத்தல்**

- மத்திய மற்றும் மாநில அரசாங்க பங்காளிகளுடன் செயற்படுதல்
- பிராந்திய நகர சபைகளிலும் அயலிலுள்ள நகர சபைகளிலும் அரசாங்கங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் சேவையை மேம்படுத்தல்
- சமூக முகவர் நிலையங்களுடனும் அமைப்புக்களுடனும் செயலூக்கமுடைய தொழில் உறவுகளை வளர்த்தல்
- மாற்று சேவை வழங்கல் உத்தி முறைகளில் தனியார் துறையை ஈடுபடுத்தல்

➢ **தனது குடியுரிமையாளர்ளை ஈடுபடுத்தும் ஒரு பிரதேசமாக இருத்தல்**

- எமது மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் தீர்மானங்களில் அவர்களை ஈடுபடுத்தல்
- தகவல்களைப் பரிமாறுவதற்கு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவது உட்பட, குடியுரிமையாளர்களுடனான இருபக்கத் தொடர்பாடல்களை மேம்படுத்தல்
- குடியிருப்பாளர்ளுடனும் அயலிலுள்ள குழுக்களுடனும் இணைந்து செயலூக்கமுடைய தீர்வுகளை வளர்த்தெடுப்பதற்கு அர்த்தமுள்ள கலந்தாலோசனைகளைப் பயன்படுத்தல்
- யோர்க் பிரதேச விவகாரங்களில் தன்முனைப்புடன் ஈடுபடுதல்

➢ **பொது நிதிகளில் பொறுப்புடன் இருத்தல்**

- சேவை வழங்கல் வாய்ப்புக்களையும் அவற்றிற்கான நிதியளிப்பினையும் விசாரித்தல்
- சிக்கனமான சேவையை வழங்குதல்
- நிதியளிப்புக்கான மாற்று மூலங்களை முயற்சித்தல்

- **நம்பகரமாக இருத்தல்**
  - எமது செயற் திறன்களை மதிப்பீடு செய்து அறியத்தருதல்
  - எமது குடியிருப்பாளர்ளிடமிருந்து மீளவூட்டல்களைப் பெற முனைதல்

# *தொலைநோக்கைச் செயற்படுத்தல்*

செயற்படுத்தலும் கண்காணிப்பும் ஒரு திட்டத்தின் வெற்றிக்கான முக்கிய கூறுகளாகும். விஷன் 2026 வெற்றிபெறுவதை உறுதி செய்துகொள்வதற்கு, இலக்குகள் எவ்வாறு வென்றெடுக்கப்படுகின்றன என்பதை நாம் கணித்தறிய வேண்டும். அத்துடன் நாம் முன்னேறிக் கொண்டிருக்கையில் அல்லது சூழ்நிலைகளும் போக்குகளும் மாறிக்கொண்டிருக்கையில் இந்த இலக்குகளின் பொருத்தப்பாட்டை கண்காணித்தல் வேண்டும்.

யோர்க் பிரதேசத்தின் கேந்திர திட்டமிடல் மற்றும் வியாபார திட்டமிடல் செயன்முறைகளின் ஒரு முக்கிய கூறு, விஷன் 2026 ஆகும். பிரதேச சபைக்கும் பிரதேசத்தின் பணியாட்களுக்குமான ஒட்டுமொத்தமான தொலை நோக்கையும் திசையையும் விஷன் 2026 நிலைநாட்டுகின்றது. பிரதேசத்துக்கும் தனிப்பட்ட திணைக்களங்களுக்கும் கூடுதலான விபரங்களடங்கிய திட்டங்கள் விருத்தி செய்யப்படக்கூடிய விசாலமான கட்டமைப்பை இது தொடர்ந்து வழங்கும்.

பிரதேச அலுவலகத் திட்டம், நீண்டகால நீர் மற்றும் கழிவுநீர் வடிகால் திட்டம், மனித சேவைகள் திட்டம், வீடில்லாமை பணிப்படையின் வேலை, ஒரு பிரதேச போக்குவரத்தின் உருவாக்கம் போன்ற முன்னெடுப்புக்கள் உட்பட, பிரதேசத்தின் வெற்றிக் கதைகளில் பல, விஷன் 2021க்கான பதிலாக வெளிவந்துள்ளன. விஷன் 2026, எதிர்காலத்துக்கான திட்டமிடல் முன்னெடுப்புக்களுக்கு களம் அமைக்கின்றது.

இலக்குகளையும் விஷன் 2026இன் செயற்பாட்டுப் பகுதிகளையும் எய்துவதன் வெற்றி, யோர்க் பிரதேசத்தின் வியாபாரத் திட்டங்கள் மற்றும் வரவு செலவு நடைமுறைகள் என்பவற்றின் ஊடாக கணித்தறியப்படும். இந்தச் செயற் திட்டம், விபரமான நடவடிக்கைகளை ஒரு திணைக்கள மட்டத்தில் வழங்குவதுடன், விஷன் 2026க்குள் உயர்மட்ட நடவடிக்கைகளுடன் ஒருங்கிணையும் வகையில் விருத்தி அடையும்.

விஷனுக்கான நடைமுறைப்படுத்தலின் அதிகாரப் படிமுறையடுக்கினை பின்வரும் படம் காண்பிக்கின்றது.



# *எமது முன்னேற்றத்தை அறிக்கையிடுதல்*

விஷன் 2026 மீதான எதிர்கால அறிக்கையிடுதல், ஏனைய பிரதேச "செயற்பாட்டு அளவீட்டு" முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கான ஒரு வாய்ப்பாகும். விஷன் சுட்டிகளின் அபிவிருத்தி மீதான தரவுதிரட்டல் மற்றும் அறிக்கையிடுதல் பற்றி கீழே தரப்பட்ட பட்டியலுக்கு, யோர்க் பிரதேசத்தின் ஏற்கனவே நடைமுறயில் உள்ள செயற் திறன் அளவீடு, ஆதாரம் அளிக்கிறது. விஷன் 2026இன் நோக்கத்தை எய்துவதற்கென மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் பற்றி எமது சமூகத்துக்கு வருடாந்தம் அறிக்கையிடுதல் அதன் இறுதியான வெற்றியாக இருக்கும்.

- **ஒரு பன்முகப்பட்ட சனத்தொகைக்கான தரம் மிக்க சமூகங்கள்**

  யோர்க் பிரதேசத்துக்கு குடியிருப்பாளர்களைக் கவர்தலும், விடாது வைத்திருத்தலும்

  போக்குவரத்துத் தெரிவுகளின் எட்டக்கூடிய தன்மையும் தரமும்

- **மேம்படுத்தப்பட்ட சூழல், பாரம்பரியம், கலாச்சாரம்**

  புற் தரைப் பாதுகாப்பும் மேம்பாடும்

  நீரின் தரமும் அளவும்

  யோர்க் பிரதேசத்தின் கலை, கலாச்சார, பாரம்பரிய வாய்ப்புக்கள்

  நீண்டகால விவசாய மூலவளங்களின் நிர்வாகம்

- **ஒரு செழிப்பான பொருளாதாரம்**

  வேலை வாய்ப்பு, வியாபார முயற்சி என்பவற்றிற்கான வாய்ப்புக்கள்

  ஆயுட் கால கற்றலுக்கும் தனிப்பட்ட அபிவிருத்திக்குமான வாய்ப்புக்கள்

- **பதிலிறுக்கவல்ல மனித சேவைகள்**

  உடலியல், உளவியல் நன்நிலை

  மனித தேவைகளுக்குப் பதிலிறுக்கும் செயற்றிட்டங்களின் செயலூக்கமுடைமையும் எட்டக்கூடியமையும்

  சுய பாதுகாப்பு மற்றும் குற்றச் செயல் பற்றிய அறிவு

- **எமது குடியிருப்பாளர்களுக்கான வீடமைப்புத் தேர்வுகள்**

  வீடமைப்புத் தேர்வுகளின் பல்வகைத் தன்மை, கட்டுப்படியாகக்கூடியமை, எட்டக்கூடியமை

- ***நிர்வகிக்கப்பட்ட, சமநிலைப்படுத்தப்பட்ட வளர்ச்சி***

  நிதியளிப்புக்களின் ஒருங்கிணைப்பும் வளர்ச்சியுடனான உட்கட்டமைப்பின் அபிவிருத்தியும்

- **வளர்ந்து வரும் ஒரு பிரதேசத்துக்கான உட்கட்டமைப்பு**

  போக்குவரத்துத் தொகுதிகளின் திறமையும் செலூக்கமுடைமையும்

  கழிவுகளை அகற்றும், திசை திருப்பும் வீதங்கள்

- **ஈடுபாடுள்ள சமூகங்களும் உடன் பதிலிறுக்கவல்ல ஒரு பிரதேசமும்.**

  யோர்க் பிரதேசத்தில் தீர்மானங்ளை எடுப்பதில் குடியுரிமையாளர்களதும் சமூகத்தினதும் ஈடுபாடு

  பிரதேச அரசாங்கத்தின் மீதான குடியுரிமையாளர்களின் திருப்தி